1978 மார்ச் 1]

* 338 வின.—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் திரு. சோ. அழகர்சாமி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முன்னாள் ராணுவ வீரர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட பொருள் போக்குவரத்துக் கழகத்தில் இப்போழுது எத்தனை முன்னாள் ராணுவத்தினர் பணியாற்றுகிறார்கள் ?

(ஆ) முன்னாள் ராணுவ வீரர்கள் அல்லாதார் எத்தனை பேர் உள்ளனர் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) மற்றும் (ஆ): 1977ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதிய நிலவரப்படி பொருள் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் 247 பேரில், 203 பேர் முன்னாள் இராணுவத்தினர்; 44 பேர் முன்னாள் இராணுவத்தினர் அல்லாதவர்கள். இக் கழகம் முன்னாள் இராணுவத்தினருக்காக மட்டுமே அமைக்கப் பட்டது என்று இதன் அமைப்பு விதிமுறைகளிலோ அல்லது அர சாங்க உத்தரவிலோ கூறப்படவில்லை

திரு. சோ. அழகர்சாமி : முன்னாள் ராணுவத்தினருக்காக மட்டும் இல்லை என்று சொன்னாலும், அதில் வேலைவாய்ப்பு அவர் களுக்கு அளிக்கும் நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டாலும் இந்தப்போக்குவரத்துக் கழகத்தில் அவர்கள் பலபேர் மனுப் போட்டுஅவர்களுக்கு அங்கே வேலை இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக் கிறது. அவர்களையும் சேர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் அவர் களுக்கு ஒரு முன்னுரிமை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இனி மேலாவது அரசு செயல்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: முன்னாள் ராணுவத்தினர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற நிலை இல்லை. மாறாக 13–7–1977 அன்று அந்தப் பொருள் போக்குவரத்துக் கழகத் துக்கு முன்னாள் ராணுவத்தினர் மனுப்போட்டார்கள். அதன் படி நேர்முகத் தேர்விற்கு 50 பேர்கள் அழைக்கப்பட்டும் இரண்டு பேர்கள்தான் வந்தார்கள். அந்த இரண்டு பேர்களும் எடுத் துக்கொள்ளப்பட்டார்கள். அதுபோல 16–8–1977 அன்று 50 முன்னாள் ராணுவத்தினர் அழைக்கப்பட்டு அவர்களிலும் இரண்டு பேர்கள்தான் இறுதியாக வந்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் துறைமுகம்.

* 339 வின.—திரு. எஸ். கணேசன், திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டினம் துறைமுக அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்குமாறு மத்திய சர்க்காரை வற்புறுத்த அரசு உத்தேசித் துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : அண்மையிலே அடிக்கப்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் துறைமுகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிற துறைமுகத்தை நவீனப்படுத்துகிற முறையில் அபிவிருத்தி செய்வதற்கு மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளதா? இல்லையென்றால் இந்த அரசு மத்திய அரசுக்கு அவ்வாறு செய்யவேண்டுமென்று குறிப்பு அனுப்ப ஏதேனும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அண்மையில் ஏற்பட்ட புயலின் காரணமாக ஏற்பட்ட சேதாரங்களைச் செப்பனிடுவதற்கு 19 லட்சம் ரூபாய் செலவிலே திட்டம் வகுக்கப்பட்டு செயல் முறையில் இருந்து வருகிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : நாகப்பட்டினத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யுமா. கப்பல்கள் வந்தால் 2 மைல் 3 மைல் படகிலே பயணிகள் செல்லவேண்டியிருக்கிறது. கப்பல்களை அருகாமையில் நிறுத்துகிற அளவுக்கு நாகப்பட்டினம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்வதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நாகப்பட்டினம் துறைமுகத்தைப் பொறுத்தவரைக்கும் பயணப் போக்குவரத்தும் சரக்குக் கப்பல் போக்குவரத்தும் 1966 ஆம் ஆண்டுக்குப் பிறகு படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்துவிட்டது. தமிழக அரசு மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு சென்னை துறைமுகத்திலே ஏற்றுமதி இறக்குமதி செய்கின்ற உணவு தானியங்கள், ரசாயனப் பொருள்கள் முதலியவற்றை கடலூர், நாகப்பட்டினம் துறைமுகங்களிலே மாற்றுவதற்குக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அது இன்னும் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

(முற்பகல் 9—50.)

திரு. ரா. உமாநாத் : இடைக்காலத்தில் பாஸஞ்சர் டிராபிக், கப்பல்கள் அங்கு அடிக்கடி வந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாதிருக்கக்கூடிய இந்த நேரத்தில்—மத்திய சர்க்கார் முடிவு எடுக்கும் வரையில் இடைக்காலத்தில் பாசஞ்சர் டிராபிக் கப்பல்கள் வருவதற்கும் மற்ற நிவாரணங்கள் அளிக்கவும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன?

1978 மார்ச் 1]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்ற மாதம் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் முயற்சியால் நடத்தப்பட்ட கூட்டத்திற்குப் பிறகு மத்திய கப்பல் துறை அமைச்சகத்தோடு தொடர்பு கொண்டு சிதம்பரம் பயணிகள் கப்பல் நாகப்பட்டினம் துறைமுகத்தில் வந்து தங்குகிற ஏற்பாட்டைத் தமிழக அரசு செய்து வருகிறது.

வெங்காயம் ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் சென்னை துறைமுகத்திலிருந்து நாகை துறைமுகம் வழி ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்ற பரிந்துரையும் செய்யப்பட்டு வருகிறது. அது நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கிறேன். அதற்காக நாகையில் ஒரு கோடவுன் கட்டப்பட இருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதங்களினுல் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்த பிறகு, அது மேற்கொள்ளப்படும்.

கோயமுத்தூர்—சென்னை பேருந்து வழித்தடம்.

*340—வினு.

திரு. ப.க.சி. முத்துசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோயமுத்தூர்—சென்னை (வழி—மேட்டூர், தருமபுரி, திருப்பத்தூர்) ஓடிக் கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்து பேருந்து (ரூட் நெ. 519) தற்சமயம் நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணம் என்ன?

(ஆ) மீண்டும் பழையபடி இந்த வழியில் பேருந்து விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) கோயமுத்தூர்—சென்னை (வழி மேட்டூர், தர்மபுரி திருப்பத்தூர்) ஓடிக்கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்துப் பேருந்து (தடம் 519) 1–1–1977 முதல் 30–4–1977 வரை தற்காலிக அனுமதியுடன் (Temporary Permit) ஓடி வந்தது. நிரந்தரமாக ஓட்ட மோட்டார் வாகன சட்டப்படி வரைவுத் திட்டம் (Draft Scheme) பிரசுரிக்கப்பட்ட பிறகு தான் உரிமம் பெறலாம்.

(ஆ) தேவையான உரிமம் பெற்று இத் தடத்தில் மறுபடியும் 7–1–1978 முதல் இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

திரு. கெ. சொக்கலிங்கம் : சென்னையிலிருந்து நாவலூர் வரையில் இப்போது 19-பி செல்கிறது. இதற்கு முன்பு சென்னையிலிருந்து அதாவது சைதாப்பேட்டையில் இருந்து கேளம்பாக்கம் வரையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் அந்தப் பேருந்து விடப்பட்டு சென்று கொண்